HHR17-1-2-TA

# இயேசுவின் கடைசி வார்த்தைகள்: வெளிப்படுத்துதல் புத்தகம் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு சுமார் பாதி கிறிஸ்தவர்கள் தங்கள் நாட்களுக்குள்ளாக இயேசு இந்த பூமிக்கு திரும்பி வருவார் என நம்புகிறார்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்து எதிர்காலத்தை பற்றி கிறிஸ்தவ சபைகளுக்கு சொன்ன வார்த்தைகளை கொண்டிருக்கிறது. உபத்திரவ காலத்தின் போது பூமியில் நடக்க இருக்கும் நிகழ்வுகளை பற்றியும், சாத்தானுக்கு என்ன சம்பவிக்கும், அந்திகிறிஸ்துவின் நிலை, கள்ள மார்க்கத்தின் நிலைகளை பற்றி சொல்லியிருக்கிறார். மேலும் அர்மகெதொன் யுத்தத்தின் போது என்ன நடக்கும் என்று சொல்லியிருக்கிறார், இரண்டாம் வருகையின் போது என்ன நடக்கும், அவருடைய ஆயிரவருட அரசாட்சி, இறுதி நியாயத்தீர்ப்பு, நித்தியத்தில் தேவன் தமது ஜனத்திற்கு திட்டமிட்டிருக்கும் அனைத்தையும் இதில் பதிவு செய்திருக்கிறார். இந்த தொடரில், வெளிபடுத்தின விசேஷத்தின் ஒவ்வொரு அதிகாரமாக விளக்கி சொல்ல இருக்கிறோம் அதினால் தேவன் எதிர்கால நிகழ்வுகளை பற்றி சொல்லியிருப்பவைகளை நீங்கள் புரிந்துகொள்வீர்கள்.

எனது விருந்தினர்கள்: Dr. எட் ஹின்ட்சன், டீன் லிபர்டி பல்கலைகழகத்தின் ஸ்கூல் ஆப் ரிலிஜியன் மற்றும் மதங்களை பற்றிய பிரிவின் விரிவுரையாளர், நாற்பதிற்கும் மேலான புத்தகங்களை எழுதியிருக்கிறார்.

Dr. மார்க் ஹிட்ச்காக் டல்லாஸ் இறையியல் செமினரியில் வேதாகமத்தை விவரித்தல் பிரிவின் துணை பேராசிரியராக இருக்கிறார். இவர் வேதாகம தீர்க்க தரிசனங்கள் என்ற தலைப்பில் 30 புத்தகங்களை எழுதியிருக்கிறார், இவர் விசுவாச வேதாக திருச்சபையின் மூத்த போதகராக இருக்கிறார்.

Dr. ரான் ரோடாஸ் ஐவரும் டல்லாஸ் இறையியல் செமினரியில் போதனை செய்கிறார், இவர் தேவ வசனங்கள் ஊழியத்தின் சிறப்பு தலைவராகவும் இருந்து வருகிறார். இவர் தீர்க்கதரிசனம் என்ற தலைப்பில் 70 புத்தகங்களை எழுதியிருக்கிறார். இந்த சிறப்பு ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நான் தான் ஜான் அன்கெர்பெர்க், எங்களோடு இணைந்ததற்கு நன்றி. நீங்கள் கேள்விபட்டபடியே நம் மத்தியில் மூன்று விருந்தினர்கள் இருக்கிறார்கள், நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம்; எல்லா கிறிஸ்துவர்களும் எதற்காக இதை வாசிக்கவேண்டும்? இயேசு சபைகளுக்கு சொன்ன இறுதி வார்த்தைகள் என்னவாக இருந்தது? அதை இந்த வெளிப்படுத்தல் புஸ்தகத்தில் பார்க்க முடியும். மேலும் நம்மோடு Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், மற்றும் Dr. ரான் ரோடஸ் இருக்கின்றனர். சரி, நீங்க, இங்க இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.. துரிதமா சுருக்கமா பார்க்கலாம், எட், போன வாரம் முதல் அதிகாரத்தை பற்றி பார்த்தோம் இல்லையா. சிலர் நிகழ்ச்சியை தவறியிருக்கலாம், அவங்களுக்காக சுருக்கமா புரியறமாதிரி சொல்ல முடியுமா.

டாக்டர் எட் ஹிந்த்சன்:...சரி, வெளிப்படுத்தலின் முதலாம் அதிகாரம், யோவான், பத்மு தீவில் கிறிஸ்து தமக்கு வெளிப்படும் காரியத்தை சொல்லி துவங்குகிறார், இது அவருடைய மரணம் உயிர்த்தெழுதலுக்கு 65 ஆண்டுகளுக்கு பின் நடப்பவை. உயிர்த்தெழுந்த இரட்சகர் யோவானிடம் சொல்கிறார், “நீ தனிமையாக இல்லை, இந்த தீவில் நீ தனிமையாக விடப்படவில்லை. உனக்காக நான் வந்திருக்கிறேன் உனக்காக ஒரு நோக்கத்தை வைத்திருக்கிறேன். இங்க கூட்டை விட்டு வெளியே வா, ஒரு பேனாவை எடு, வரலாற்றை புரட்டி போடும் ஒரு புத்தகத்தை நாம் எழுதப்போகிறோம் என்றார்.” இயேசு தம்மைத்தாமே யோவானுக்கு வெளிப்படுத்தி இவைகளை கூறுகிறார், இதை யோவான் மூலமாக யோவானை கொண்டு நமக்கு

தருகிறார். அதிகாரம் ஒன்று உண்மையில் புத்தகத்தின் ஒரு அறிமுக பகுதியாக காணப்படுகிறது.அடுத்து அதிகாரம் 2 மற்றும் 3 ஏழு சபைகளுக்கு எழுதப்படுகிற கடிதங்களாக இருக்கிறது. இயேசு இந்த செய்திகளை முதலாம் நூற்றாண்டின் போது ஆசியாவின் பகுதிகளில் இருந்த ஏழு வெவ்வேறான சபைகளுக்கு சொல்லுகிற காரியங்கள் இவை சபையின் மேய்ப்பர்களுக்கு என்று சொல்லப்படுகிறது, “நீங்க இதெல்லாம் சரியாக செய்து வருகிறீர்கள், தொடர்ந்து செய்யுங்கள், ஆனா உங்ககிட்ட சில தவறுகளும் இருக்கிறது.  நீங்க மனந்திரும்பி நேர்த்தியானத்தை செய்ய வேண்டும்.”

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி. இப்ப சொல்லுங்க, ஏற்கனவே ஓரிரு சபைகளை குறித்து நாம பார்த்திருக்கோம். இப்ப பெர்கமுவ பார்க்க விரும்புகிறேன், சரியா, ரான். இது சமரசமாகிகொள்ளும் சபையாக இருந்தது. இங்கு கர்த்தர் சொல்லுகிறார், “இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது, “இயேசுவை பற்றி சொல்லியிருக்கிறது, “உங்கள் கிரியையை அறிந்திருக்கிறேன்.” இதை நாம போன வாரமும் பார்த்தோம் இருந்தாலும் மறுபடியும் இதை பற்றி பார்க்க போகிறோம். கிறிஸ்தவர்களாக இருக்கிற ஒவ்வொருவரும், இயேசு சபைகளை கையாளுவதை குறித்து என்ன சொல்லுகிறார் என்பதை புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். முதலாவதாக, ஒவ்வொரு ஞாயிற்று கிழமைகளிலும் அவர் ஒவ்வொரு சபைக்கும் வருகிறார். இரண்டாவதாக, ஒவ்வொரு அங்கத்தினரையும் அவர்களுடைய கிரியைகளையும் அவர் அறிந்திருக்கிறார், நீங்க என்ன செய்றீங்கன்னு அவருக்கு தெரியும். அவர் சொல்றாரு, “உன் கிரியைகளை அறிவேன். நீ எங்கிருந்தாய் என்று அறிவேன்.” நீங்க என்ன யோசிக்கிறீங்கன்னு அவருக்கு தெரியும், சரியா? அவர் இந்த சபையை பார்த்து சொல்கிறார், “நீங்க எங்கிருந்தாய் என்றும் உன் கிரியைகளையும் நான் அறிந்திருக்கிறேன், மேலும் அவர் சொல்கிறார், “நீ சாத்தானுடைய சிங்காசனம் இருக்கும் இடத்தில் குடியிருக்கிறாய் என்கிறார்.” இங்க சாத்தானுடைய சிங்காசனம் என்றால் எதை குறிக்கிறது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..இது, ஓரிரு காரியங்களை குறிக்கிறதென்று நினைக்கிறேன். என் கருத்து, முதலாவதாக, ரோம ஆராதனை, சக்ரவர்த்தியை தொழுவது, உலகத்தின் அந்த பகுதியில் இது பொதுவான ஒன்றாக இருந்தது. அதாவது இதுல எல்லா ரோம பிரஜைகளும் சீசர்தான் தேவன் என்று சொல்ல வேண்டியிருந்தது. சீசரை தேவன் என்று சொல்லாவிட்டால், நீங்க உபத்திரவப்படுத்த படுவீங்க இல்லன்னா சிரை சேதம். ஆனா உண்மையில், இதுக்கெல்லாம் மேல, அங்க சீயஸ்க்கு மிகப்பெரிய பலிபீடம் இருந்திருக்கு அதுதான் சாத்தானுடைய சின்காசனமாக இருந்திருக்கும் என்று நினைக்கிறேன். இந்த ராட்சத போய் தேவன் இருந்திருக்குது. மேலும், அதாவது, இந்த பகுதியில் தொடர்ந்து பார்க்கும்போது சபை செய்த சில காரியத்தை கூறுகிறது, அவங்க மேலோட்டமா சமரசமாயிடாங்க. இதிலிருந்து என்ன தெரியுதுன்னா இன்றைக்கு சபைகளுக்குள் எந்தவிதமான சமரசங்களும் இருக்க கூடாது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவர் சொல்லுகிற இன்னும் சில விஷயங்களை உங்களுக்கு சொல்லுகிறேன், சரியா? முதலாவதாக அவர் சொல்கிறார், நீங்க உண்மையுள்ளவர்களாக இருந்தீர்கள் “எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் உண்மையா இருந்தீங்க.” இங்க, முதலாவதாக, இங்கிருந்த நல்லவங்களை பற்றி சொல்லுங்க. இந்த அந்திப்பா யார்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..அந்திப்பா என்பவன் ரோம சக்ரவர்த்தியான டொமிடியன் ஆளுமையில் இருந்தபோது அப்போஸ்தலனாகிய யோவானால் பெர்கமு சபையின் பேராயராக நியமிக்கப்பட்டவர். அவரை அவங்க கொலை செய்துட்டாங்க அவரை ஒரு வெண்கல பானைகுள்ள போட்டு அந்த வெண்கல பானையை கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்த நெருப்பில் போட்டுட்டாங்க. அவர் வந்துபோய் மரித்தார் என்று பார்க்கிறோம். இது உண்மையில் கொடூரமான கொலையாக இருந்தது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அவங்க இதை நேரடியாக பார்த்துகொண்டிருந்தும் உண்மையுள்ளவர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனா நீங்க உண்மையுள்ளவர்களாக

இருந்தீர்கள் என்று சொன்ன பிறகு, அங்க ஒரு மாற்றத்தை அல்லது சின்ன சறுக்கல் உண்டாவதை பார்க்க முடிகிறது. அவர் சொல்கிறார், "உன் பேரில் எனக்கு குறை உண்டு, பிலேயாமின் போதகத்தை கைகொள்ளுகிறவர்கள் உன்னிடத்தில் உண்டு என்கிறார்." தேவன் கள்ள உபதேசத்தை வெறுக்கிறார். இதை பற்றி ஏனோ தானோவென்று இருக்க கூடாது, தேவன் சொல்கிறார், "இந்த போதகத்தை நான் வெறுக்கிறேன்." ஆனா இந்த பீலேயாமின் போதகம் எப்படிப்பட்டது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..சரிஇ இந்த பகுதியே இதை நமக்கு விளக்கி கூறுகிறது. அதாவதுஇ சில காரியங்களைக்குறித்து உன்பேரில் எனக்குக் குறை உண்டு; விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிப்பதற்கும் வேசித்தனம்பண்ணுவதற்கும் ஏதுவான இடறலை இஸ்ரவேல் புத்திரர் முன்பாகப் போடும்படி பாலாக் என்பவனுக்குப் போதனைசெய்த பிலேயாமுடைய போதகத்தைக் கைக்கொள்ளுகிறவர்கள் உன்னிடத்திலுண்டு." அதாவது இங்க ஒரு கூட்ட மோவாபிய பெண்கள் இஸ்ரவேல் ஆண்களை மயக்கி திருமணம் செய்துகொள்ளும் நிலையை ஏற்படுத்த காரணமானவன். இது தேவனுடைய சித்தத்திற்கு மீறி நடக்கும் செயலாகும். இது அறநெறியின் விஷயங்களை சமரசமாவதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** அதுக்கு பிறகு, "அதைப்போலவே நிக்கோலாய் மதஸ்தருடைய போதகத்தை கைகொள்ளுகிறவர்களும் உன்னிடத்திலுண்டு அதை வெறுக்கிறேன் என்கிறார்." இங்க அவர் வெறுக்கிற இன்னொரு தவறான உபதேசம் இருக்கிறது. ஆனா இந்த நிக்கோலாய் மதஸ்தர் யார்?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**..சரி, நிக்கொலாய் மதஸ்தர், வல்லுனர்கள் மத்தியில் மிகப்பெரிய பேச்சு வார்த்தை நடந்துவந்தாலும் இதை குறித்த பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவி வருகிறது. நா வந்து பெரும்பாலான கிறிஸ்தவர்கள் தங்கள் நன்னடக்கை குறித்து பெரிதும் பேசப்படுகிற தன்மை உடைய சிந்தனை பள்ளியின் கருத்தை எடுத்துகொள்கிறேன். அதிகப்படியான சுய இன்ப செயல்கள், அதிகப்படியான சுய விருப்பங்களின் ஆளுமை, மனம்போன போக்கில் வாலும் நிலை, பாலியல் ஒழுக்கக்கேடுகள் அதிகரிக்கிறது. அப்படி பார்க்கும்போது இங்க இரண்டு இடங்களிலும் பாலியல் ஒழுக்ககேட்டை பற்றிதான் போதனை இருப்பது தெரிகிறது. கிறிஸ்தவ சபையில் இருக்கிறவர்கள் அதை பற்றி நினைக்க விரும்புவது கிடையாது என்று நினைக்கிறேன், ஆனா அங்க இருந்தது. இவங்க இந்த ஜனங்க கிறிஸ்துவின் நாமத்திற்காக நிற்கிறவர்கள் என்று பெயர் பெற்றிருந்தாலும் அவங்க பாலியல் ஒழுக்ககேட்டை உடையவர்களாக இருந்தாங்க. என்னை பொறுத்தவரையில் இது இன்றைய சபைக்கு மிகப்பெரிய எச்சரிக்கை தான்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** மார்க்இ அடித்து தியத்தீரா சபைக்கு வரலாம். அவர் சொல்கிறார்இ "உன் கிரியைகளை அறிவேன்இ உன் அன்புஇ உன் சேவைஇ உன் விசுவாசம்இ உன் பொறுமை. நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகம் என்றும் அறிவேன்." அதாவது முன்னாடி செய்ததை விட இப்ப அதிகமான கிரியைகளை செய்கிறார்கள். இவங்க சூப்பர் டூப்பர் ஆளுங்களை போல தென்படுகிறார்கள். இப்ப இங்க அவர் என்ன சொல்றாரு பாருங்கஇ "ஆகிலும்இ உன்பேரில் எனக்கு குறை உண்டுஇ என்னவெனில், தன்னைத் தீர்க்கதரிசியென்று சொல்லுகிற யேசபேல் என்னும் ஸ்திரீயானவள் என்னுடைய ஊழியக்காரர் வேசித்தனம்பண்ணவும்

விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளைப் புசிக்கவும் அவர்களுக்குப் போதித்து, அவர்களை வஞ்சிக்கும்படி நீ அவளுக்கு இடங்கொடுக்கிறாய்.இங்க யேசபேல் யார்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**சரி, யேசபேல் என்பது பழைய ஏற்பாட்டில் காணப்படுகிற பெயர், இவள் ஆகாப் ராஜாவின் மனைவி. இவள் சீதோனியரின் ராஜகுமாரத்தில். இவள்  விக்கிரக ஆராதனை செய்பவள். அவ உள்ள புகுந்து இஸ்ரவேல் தேசத்தை தீட்டு படுத்தினாள், தன் கணவனை இடறி விழ செய்தாள். அதனால் யேசபேல் என்னும் பெயர், இது உண்மையாகவே அந்த பெண்ணின் பெயர் தானா என்று நமக்கு தெரியாது, ஆனா அவள் உட்புகுத்தின அதே யோசனையை தான் இதுவும் முன்வைப்பதாக தெரிகிறது. இதுல சுவாரஸ்யமான ஒன்று என்னன்னா, இது யேசபேலை கடிந்துகொள்கிறது, அதாவது, “நீ யேசபேல் என்னும் ஸ்திரீயானவளுக்கு இடம்கொடுக்கிறாய்.” இங்க அவர் அங்கிருக்கும் தலைவர்களுக்கு எழுதுகிறார் ஏன்னா அங்கிருந்த தலைகவர்கள் இந்த ஸ்திரீயின் தவறான போதகத்தை பொறுத்துக்கொண்டு இருந்தார்கள். அப்ப உண்மையாகவே தியத்தீரா சபையில் இருந்த பிரட்சனை என்னனா எல்லாத்துக்கும் இடம்கொடுத்தாங்க, தவறான போதகம் மற்றும் தவறான உபதேசத்துக்கு இடம் கொடுத்தாங்க. நாமளும் எல்லாத்தையும் சகித்துக்கொள்ள நினைக்கிறோம், ஆனா நாம தவறான போதகத்தையும் தவறான உபதேசத்தையும் சகித்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, எட், சரத்தை சபையை குறித்து இயேசு சொல்லும் காரியம் சுவாரஸ்யமா இருக்கு, அடுத்து சரத்தை சபை. அவர் சொல்கிறார், “உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவன் என்று பெயர் கொண்டு இருக்கிறார்.” பல சபைகள், இன்று, வெறும் ஒரு பயண ஸ்தலமாக மாறிக்கொண்டு இருக்கிறது, இல்லையா? அதுல இதுவும் ஒன்றாக இருந்திருக்கும், சரியா? ஆனா இயேசு சொல்கிறார், “ஆனால் நீ செத்தவனாக இருக்கிறாய்.” என்ன அர்த்தத்துல சொல்றாரு?

**டாக்டர் எட் ஹிந்த்சன்**:..இது, சுவாரஸ்யமானதுதான். ஆசியா மைனரில் சர்தைதான் தலைநகரமாக இருந்தது. அது பழைய நகரம், முதலாம் நூற்றாண்டில் அது மரித்துகொண்டிருக்கும் நிலையில் இருந்தது. அங்கிருந்த சபைகூட செத்துப்போன சபையாகதான் இருந்தது. அதாவது இது ஒரு சபைக்கு மாதிரியாக இருந்தது என்று நான் நினைக்கிறேன் என்னன்னா சிலர், எங்களுக்கு இயேசுவை பற்றியும் வேதத்தை பற்றியும் எல்லாம் தெரியுன்னு சொல்லியும்," ஆவிக்குரிய மரணத்தில் இருக்க முடியும். யாருமே மனந்திரும்பாம, யாருமே கிறிஸ்துவிடம் வராம இருக்கலாம். அங்க ஒன்னுமே நடக்கல. அந்த சபையினுடைய ஆவிக்குரிய வாழ்க்கை மங்கிபோயிட்டே இருந்தது. அதனால தான் அவர்களை அவர் அச்சுறுத்துகிறார், "நான் வந்து விளக்கு தண்டை அதினிடத்தினின்று விளக்கி போடுவேன்." வேறு வார்த்தையில, "எல்லாவற்றையும் சாக கொடுப்பேன். என்னை உண்மையாக நேசித்து எனக்கு ஊழியம் செய்ய விரும்புகிறவர்களுக்கு என் ஆவியையும் வல்லமையையும் அழித்திடுவேன் என்கிறார்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட். அடுத்து பிலதெல்பியா சபையை பார்க்கலாம் என நினைக்கிறேன், ஏன்னா இங்க அருமையான ஒரு வாக்குத்தத்தம் இருக்குது, மார்க். இயேசு சொல்றார், "என்னுடைய கட்டளைகளை நீங்கள் காத்துகொண்ட படியால், "அவர்களை அவர் பாராட்டி பேசுகிறார், "நானும்", உங்களுக்கு வாக்குகொடுக்கிறேன் என்கிறார், "பூமியின் குடியிருக்கிறவர்களை சோதிக்கும்படி பூமியின் மீது வரப்போகிற சோதனை காலத்திற்கு உன்னை விளக்கி காப்பேன் என்று வாக்குபண்ணுகிறார்." இயேசு வாக்குத்தத்தம் செய்தாருன்னு அவர் நிச்சயம் இந்த பூமியின் மீது வரப்போகிற அந்த சோதனை காலத்திற்கு விசுவாசிகளை விளக்கி காத்திடுவார், ஏன் விசுவாசிகளுக்கு நீங்க எடுத்து கொள்ளப்படுதல் மூலமா உபத்திரவ காலத்தில் இருந்து முற்றிலும் விலக்கப்பட்டு இருப்பீர்கள் என்று வாக்குபண்ணுகிறார்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:**..இந்த , பகுதியை அந்த சூழ்நிலையின் பின்னணியில் பார்க்கும்போது, முதலாவதாக, சிலர் சொல்லும் கருத்து, "இது,

பிலதெல்பியா சபைக்கு சொல்லப்பட்ட ஒரு சாதாரணமான வாக்குத்தத்தம் தான்." இன்னொன்றையும் நினைவில் கொள்ளவேண்டும் இயேசு சொல்கிறார் "ஆவியானவர் சபைகளுக்கு சொல்லுகிறதை காதுள்ளவன் கேட்கக்கடவன் என்கிறார்." அப்ப இது எல்லா சபைகளுக்கும் சொல்லப்படும் வாக்குத்தத்தம். இந்த பகுதியின் பின்னணியை வைத்து பார்க்கும்போது அவர் சொல்றாரு, "இந்த பூமியின் மீது இருக்கிறவர்களை சோதிக்கும்படி இந்த பூமியின் மீது வரப்போகிற சோதனை காலத்திற்கு உங்களை விளக்கி காத்துகொள்வேன் என்கிறார்," அதாவது பூமியில் வாசமாக இருக்கிறவர்கள், இந்த புத்தகத்தின் படி பார்க்கும்போது, வெளிப்படுத்தல் பதினாறு முதல் பதினெட்டு அதிகாரத்தை குறிக்கிறது. இந்த புத்தகத்தின் படி அதுதான் பூமியின் மீது வரும் சோதனை காலத்திற்கான நேரம். அதைதான் நாம் உபத்திரவ காலம் என்று சொல்கிறோம்.

இங்க இயேசு சொல்கிறார், இதை அவர் சும்மா சொல்லல, "நான் உன்னை சோதனைக்கு விளக்கி காப்பேன்னு சொல்லல, என்ன சொல்றாரு, "சோதனை உண்டாகும் நேரத்திற்கு காத்திற்கு விளக்கி காத்திடுவேன் என்று சொல்லுகிறார்." எனக்கு தெரிந்த சோதனை காலத்தில் நம்மை விளக்கி காக்க ஒரே வழி நாம் இந்த இடத்தில் இல்லாமல் இருப்பதுதான் என்று நினைக்கிறேன். அவர், உண்மையில், அடுத்த பத்தியில் இதைதான் சொல்றாரு, "இதோ, நான் சீக்கிரமாக வருகிறேன்." அப்ப அவருடைய வருகையின் மூலமாகத்தான் அவர் வந்து விசுவாசிகளை இந்த சோதனை காலத்தில் இருந்து விளக்கி காத்திடும்படி அவர்களை அழைத்து செல்வார். ஏன்னா பூமியின்மேல் இருக்கிறவர்களை சோதிக்கும் படியான காலம், உலகத்தின் கண்ணோட்டத்தில் இருக்கிறவர்கள் மற்றும் தேவனுக்கு விரோதமாக தங்கள் இருதயத்தை கடினப்படுத்தினவர்களை சோதிக்கும்படியான காலமாக இருக்கும் என்கிறார். அதனால இது தேவன் வரப்போகிறார் என்பதற்கும் தமது ஜனங்களை பூமியின் மீது வர இருக்கும் சோதனை காலத்திற்கு விளக்கி மீட்டிடுவார் என்பதற்கும் இது ஆதாரம் என நம்புகிறேன். அவர் வந்து நம்மை அந்த காலத்திற்கு விளக்கி காத்துக்கொள்ள போகிறார்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, நம்முடைய முந்தைய நிகழ்ச்சியில் கூட நாம ஏன் எடுத்துகொள்ளப்படுதலையும் இரண்டாம் வருகையையும் இரண்டு வித்தியாசமான நிகழ்வாக பார்க்கிறோம் என்று சொன்னோம், இது உபத்திரகாலத்திற்கு விலக்கப்பட்டதாகும். அதோட இப்ப இதுவும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் ஒரு வாக்குதத்தமாக இருக்கிறது, இன்னும் அதிகமாக இருக்கிறது அதை பற்றியும் நாம பேச போகிறோம். இதையெல்லாம் நீங்க அடிகோடு போட்டு வைக்கணும். ரான், லவோதிக்கேயா வெதுவெதுப்பான சபை எனப்படுகிறது. அவர் சொல்றார், "நீ அனலுமின்றி குளிருமின்றி இருக்கிறார். நீ அனலாவாவது குளிராவாவது இருக்க விரும்புகிறேன், ஆனால், நீ வெதுவெதுப்பாக இருக்கிறார், "அனுலமின்றி குளிருமின்றி இருக்கிறபடியால் உன்னை வாந்தி பண்ணி போடுவேன் என்று, இயேசு சொல்கிறார். இதை பற்றி சொல்லுங்க.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**இது கண் திறக்க வைக்கும் ஒன்று. அதாவது, மறுபடியும், இயேசு சொல்றாரு, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உங்க சபைக்குள்ள என்ன நடக்குதுன்னு எனக்கு நல்லா தெரியும் என்கிறார். நீ எதுக்கு அசராம அப்படியே இருக்க. நான் ஆழங்களை பார்க்கிறேன் என்கிறார். என்ன நடக்குதுன்னு பார்க்கிறார்." இங்குள்ள வார்த்தை, அந்த வரி, "உன்னை வாந்தி பண்ணி போடுவேன், " கொடூரமானது. அதாவது, இன்றைக்கு ஜனங்க இயேசுவின் மென்மையான வார்த்தைகளை மட்டும் ஏற்றுகொள்ள முன்வருகிறவர்களாக இருகிறார்கள். இயேசு இங்க மென்மையான வார்த்தைகளை சொல்லவில்லை. அவர் நியாயத்தீர்ப்பை பற்றி பேசுகிறார்; ஒழுக்கத்தை பற்றி பேசிக்கொண்டு இருக்கிறார். வெதுவெதுப்பாக இருப்பது நல்லதல்ல.

இங்க, மற்ற சுற்றுபுறத்தில் இருக்கிற சபைகளோடு ஒப்பிட்டு இணையாக வைத்து சொல்லப்படும் காரியத்தை பார்க்க முடிகிறது. கொலோசே, உதாரணமாக, அதனுடைய குளிர்ந்த நீருக்கு பெயர்போனது, குளிர்ந்து நன்றாக இருக்கும். ஹீராபோலிஸ் அதனுடைய வெப்ப நிலைக்கு பிரபலமானது. அந்த வெப்பமான துளிர் காலம் அங்குள்ள

மக்களின் ஆரோக்கியத்திற்கு ஏற்றது என்று சொல்லபடுகிறது. ஆனா அடித்தளத்தில் கொண்டு வரப்படும் தண்ணீர் இந்த சபையை சேரும்போது வந்து சேர்வதற்குள் குளிர்ந்து அதாவது வெதுவெதுப்பாக இருக்கிறதாம். அது நல்லது அல்ல என்கிறார். அதனால சபையை தேவன் இதற்கு ஒப்பிடுகிறார். மேலும் அவர்களிடம் என்ன சொல்றாரு, " நீங்க கண்டிப்பா மாறவேண்டும், நீ இப்படி இருப்பதில் எனக்கு விருப்பம் இல்லை என்கிறார்."

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், இப்போது ஒரு சிறிய இடைவேளை எடுத்துகொள்வோம். நாம் ஏழு சபைகளை குறித்து பேசிக்கொண்டு இருக்கிறோம், ஆனா இப்ப இயேசு அடுத்து எதிர்காலத்தில் சபவிக்கும் விஷயத்திற்கு மாறுவதை பார்க்கிறோம். இடைவேளைக்கு பிறகு நாம் அதை பற்றி பார்க்க இருக்கிறோம். இணைந்திருங்கள்.

*****

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மீண்டும் வருக. நாம் வெளிப்படுத்தின விசேஷத்தை பற்றி பார்த்துகொண்டு இருக்கிறோம், ஒவ்வொரு அதிகாரமாக வெளிபடுத்தின விசேஷத்திற்குள் உங்களை நடத்தி செல்ல விரும்புகிறோம். நாம் பேசிக்கொண்டு இருப்பது Dr. எட் ஹின்ட்சன், Dr. மார்க் ஹிட்ச்காக், மற்றும் Dr. ரான் ரோடஸ் உடன். சரி, எட், இப்ப நாம நான்காவது அதிகாரத்தில் இருக்கிறோம் இயேசு ஏழு சபைகளுக்கு என்ன சொன்னார் என்பதை நாம் பார்த்துவிட்டோம், இங்க அடுத்து ஒரு நிலைமாற்றம் உண்டாகிறது. வேறோ என்னமோ இங்க நடக்குது. என்ன நடக்குது?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**..நான்காவது அதிகாரம் இப்படி துவங்குது, "இவைகளுக்கு பின்பு, "அடுத்ததாக, "பரலோகத்தில் திறக்கப்பட்ட வாசலை கண்டேன் என்னோட பேசின எக்காள சத்தத்தை கேட்டேன்." முதல் அதிகாரத்தில் அது இயேசுவின் சத்தம் என்று இருக்க்ரியது. இயேசுதான் யோவானை அழைக்கிறார், "ஏறி வா இவைகளுக்கு பின்பு சம்பவிக்க வேண்டியவைகளை உனக்கு காட்டுவேன். யோவான்,

ஏறி வா, எதிர்காலத்தை உனக்கு காட்டுகிறேன்." இந்த பகுதியில் இருந்து, எதிர்காலத்தில் சம்பவிக்க போகிறவைகளை மையப்படுத்தி இந்த புத்தகத்தில் இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், மார்க், சிலர் இதை எடுத்துகொள்ளப்படுதல் என்கிறார்கள். நீங்க இது அதுதான்னு சொல்றீங்களா இல்லைன்னு சொல்றீங்களா, சரி, இல்லைன்னு சொன்னா இந்த நான்காம் அதிகாரத்தில் சொல்லப்பட்டதற்கு அர்த்தம் என்னவாக இருக்கும்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**சரி, அதாவது இங்க, எக்காள சத்தமும் யோவான் வானத்தில் எடுத்துகொள்ளப்பட்டதால், பலர் இது எடுத்துக்கொள்ளப்படுதல் தான் என்று சொல்ல கூடும், அதற்கு அடையாளமாக இருக்கிறது எனலாம். இதுல பிரச்சனை என்னன்னா, யோவான் தான் பூமியில் இருந்து வானத்துக்கு போகிறார், சபை அல்ல. ஒருவேளை நாம் யோவான் பரலோகத்திற்கு ஏறி சென்றதை வைத்து இது எடுத்துகொள்ளப்படுதலுக்கு அடையாளம் என்று சொல்வோமானால், நாம இந்த பகுதியை எடுத்துகொள்ள வேண்டிய விதத்தை கடந்து பார்க்கிறோம் என நினைக்கிறேன்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆனா இன்னொரு ஆதாரம் இது வந்து எடுத்துகொள்ளப்படுதலில் எதிர்காலத்தில் நடக்கப்போகிற நிகழ்வு என்கிறது. நீங்க தை எப்படி பார்க்கிறீங்க?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**சரி, அதாவது, நாம வெளிப்படுத்தல் புத்தகத்தை பார்க்கும்போது போன முறை நாம வெளிப்படுத்தல் 3:10 பற்றி பேசினோம், அவர் இந்த பூமியின் மீது வர இருக்கும் சோதனை காலத்திற்கு நம்மை விளக்கி காத்திடுவார் என்று. இதே வெளிப்படுத்தின விசேஷத்தில், சபை என்கிற வார்த்தை 20 முறை பயன்படுத்தப்பட்டு உள்ளது. முதல் மூன்று அதிகாரத்தில் 19 முறை பயன்படுத்தப்பட்டு உள்ளது அதுக்கு பிறகு வெளிப்படுத்தல் 19ல பரலோகத்தில் இயேசுவோடு மணவாட்டியாக என்ற இடம் வரைக்கும் சபைன்ற வார்த்தை இல்லை. அதுக்கு பிறகு

சொல்லப்போனா வெளிப்படுத்தல் 22:16 வரைக்கும் சபை என்ற வார்த்தை இல்ல. அப்ப சபையானது வெளிப்படுத்தல் நான்கு முதல் பதினெட்டு அதிகாரங்களுக்கு முன்னாலயே போயிடுச்சு, இது சபையானது தேவனிடமாக எடுத்துக்கொள்ளப்பட்டது என்று உணர்த்துகிறது, பூமியின் மீது சோதனை காலம் துவங்கும்போது இது பரலோகத்தில் தேவனோடு இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** சரி, இப்ப, வேத பாடத்தில் கலந்துகொண்டு படிக்கிறவர்கள் சிலவற்றை அறிந்துகொள்ள விரும்புகிறார்கள் என நினைக்கிறேன், அதாவது, இந்த வெளிபடுதல் புத்தகத்தை எப்படி படிப்பது? அதாவது என்ன சொல்றேன்னா இதன் அடிப்படையில் பிரபலங்கள் பலர் நான்கு ஐந்து விதங்களை முன்வைத்து வெளிப்படுத்தின விசேஷத்தை இப்படிதான் வாசிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அதை பற்றி துரிதமாக பார்க்கலாமா. யாரும் இதை தவறிட கூடாதென்று நினைக்கிறேன், அதனால மிக துரிதமா, சுலபமான உதாரன்களோடு, புரிகிரவிதமான, கண்ணோட்டம் எதுன்னு சொல்லுங்கள்.

**டாக்டர் எட் ஹிந்த்சன்:..**சரி, முதலாவதாக,, யோவான், இது படர்ந்த கண்ணோட்டம், அதாவது வெளிப்படுத்தலில் சொல்லபப்ட்ட அனைத்தும் கடந்த காலத்தில் சம்பவித்து இருக்கிறது, அல்லது இதுக்கு முன்னால ஏற்க்கனவே இது நடந்திருக்கிறது. அந்த கண்ணோட்டத்தில் சொல்லப்படுகிற காரியங்கள் கிபி 70ல எருசலேம் ரோமர்களால் அளிக்கப்பட்டது அதை பற்றிதான் வெளிப்படுத்தின விசேஷம் கூறுகிறது என்கின்றனர். இந்த கண்ணோட்டத்தின் முக்கிய பிரச்சனை என்னன்னா வெளிப்படுத்தின விசேஷத்திற்கு இது கொஞ்சமும் பொருந்துவது இல்லை. இங்க நீங்க வெளிப்படுத்தலின் பாபிலோனை தான் எருசலேமாக பார்க்கணும், இயேசு மறுபடியும் வர வேண்டி இருக்குது, வெறும் ரோம சேனையை  எருசலேமை அளிக்க விட்டுகொடுத்துட்டு அவர் பரலோகத்தில் இருந்து பூமிக்கு வருவதற்கான நோக்கம் நிறைவேறிவிட்டது என்று சொல்ல முடியுமா. எனக்கு அப்படி தோன்றவில்லை.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா, இன்னும் இரண்டு விதங்கள் உண்டு, ஒன்று வரலாற்று கண்ணோட்டம் இன்னொன்று ஐடியளிச்டிக் கண்ணோட்டம். மார்க்?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**இந்த கண்ணோட்டங்கள் அனைத்தும் காலத்தோடு சம்பந்தப்பட்டு இருக்கிறது. இந்த நிகழ்வுகள் எப்போது சம்பவிக்கும் என்ற காலத்தின் அடிப்படையில் தான் அமைந்திருக்கிறது. வரலாற்று கண்ணோட்டத்தின்படி சொல்லப்படும் காரியம் இந்த வெளிப்படுத்தல் புத்தகமானது இயேசுவின் முதலாம் மற்றும் இரண்டாம் வருகைக்கு இடையில் சம்பவிப்பதை கூறுகிறது என்கிறது, அதாவது அளவிடுகிறது, உண்மையில், எல்லா காலங்களை கொண்டிருக்கு. இந்த அண்டத்தின் காலங்களை கணக்கில் கொண்டிருக்கு. ஆனா இந்த வரலாற்று கண்ணோட்த்தில் உள்ள பிரச்சனை, நீங்க எங்க வாழ்றீங்க என்பதன், அடிப்படையில் மக்கள் இதை வெவ்வேறு விதங்களில் புரிந்துகொள்கிறார்கள். அவங்க ஒரு வித்தத்தில் விளக்கம் கொடுத்தா, சுமார் நூறு ஆண்டுகளுக்கு பிறகு வேறு விளக்கமாக பார்க்கிறார்கள். அந்த வியாக்கியானத்திற்கு நிலையான தன்மை இல்லாமல் போகிறது.

மற்றொரு கண்ணோட்டம், இது ரொம்ப, ரொம்ப பொதுவான கண்ணோட்டம். ஐடியலிஸ்டிக் கண்ணோட்டம். அதாவது இந்த கண்ணோட்டத்தில் கால நேரம் இல்லை. இது என்ன சொல்லுதுன்னா வெளிப்படுத்தின விசேஷம் எந்த ஜனங்களையும் நிகழ்வையும் குறிப்பிட்டு சொல்வது இல்லை என்கிறது. இது ஆவிக்குரிய வியாக்கியான முடையது என்கிறது. பொதுவா பார்த்தா இது சபைக்கும் உலகத்திற்கும் இடையில் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும் ஒரு யுத்தம் என்று கூறுகிறது, இந்த கண்ணோட்டத்தின் பிரச்சனை என்னன்னா, இந்த அடையாளங்களுக்கு திடமான அர்த்தத்தை கொடுப்பதில்லை என்கிறது. வெளிப்படுத்தல் முதலாம் அதிகாரத்திற்கு வாங்க, இயேசு சொல்கிறார், ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம், ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம். இயேசுவே நம்மகிட்ட சொல்றாரு ஒவ்வொரு அடையாளத்திற்கு திடமான விளக்கம் இருக்கிறது, அது தத்ரூபமானவை.

அவை சிலவற்றை குறிக்கும் ஒன்றாக உள்ளது. இதுதான் இந்த ஐடியலிஸ்டிக் கண்ணோட்டத்தின் பெலகீனமாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. சரி, ரான், எதிர்காலத்தினரின் கண்ணோட்டத்தை பார்க்கலாம். அது என்னது?

**டாக்டர் ரான் ரோட்ஸ்:**...எதிர்கால கண்ணோட்டம் என்பது இந்த வெளிப்படுத்தல் புத்தகத்தின் பெரும்பாலான நிகழ்வுகளை எதிர்காலத்திற்கு உரியது என்கிறது, எதிர்காலத்தை பற்றிய தீர்க்க தரிசனங்கள். நா நான்காம் அதிகாரம் முதல் 22 வரைக்கும் சொல்கிறேன். ஆசியாவின் சபைகள் என்பது கடந்த காலம், ஆனால் நான்காம் அதிகாரம் முதல் இருப்பவை எதிர்காலத்தை குறித்த வேறு பாணியாக இருக்கிறது. நான்கு முதல் பதினெட்டு அதிகாரம் வரைக்கும் உபத்திரவ காலத்தை பற்றி கூறுகிறது. அதிகாரம் 19 கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை பற்றி கூறுகிறது; 20வது அதிகாரம் ஆயிர வருட அரசாட்சியை பற்றியும் பெரிய வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பை பற்றியும் கூறுகிறது; அடுத்ததாக நித்தியத்தை பற்றி 21 22 அதிகாரங்கள் எடுத்து சொல்கிறது.

இப்ப, எதிர்கால கண்ணோட்டத்தின் பல காரணங்களை கூறுகிறேன். முதலாவதாக, இதனுடைய சுற்றறிக்கையை வெளிப்படுத்தல் 1:19ல் பார்க்கிறோம், “சம்பவிப்பவைகளையும் சம்பவித்தவைகளையும் சம்பவிக்க போகிரவைகளையும் எழுது” சரியா? அப்ப நான்காம் அதிகாரம் எதிர்காலத்தை பற்றியவைகளை சொல்கிறது. வெளிபடுத்தல் 1:3 வெளிப்படுத்தின விசேஷம் ஒரு தீர்க்கதரிசன புத்தகம் என்கிறது. இனி வரப்போகிறவைகளின் தரத்தை நிர்ணயிப்பதாக இருக்கிறது.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஒருவேளை இதை நீங்கள் எற்றுகொல்லாவிட்டால் இதை நமக்கு சொன்ன இயேசுவோடு கருத்து வேறுபாடு கொள்கிறீர்கள்.

**டாக்டர் ரான் ரோட்ஸ்:..**ரொம்ப சரியா சொன்னீங்க. நீங்க மற்ற கண்ணோட்டங்களை பற்றி பேசும்போது சிலதுல அடையாளங்களும் மற்ற கருத்துக்களும் இருக்கலாம், உண்மையில் இது எல்லாம் உண்மையான ஜனங்களை பற்றியும் எதிர்காலத்தில்ஸ் சம்பவிக்க இருக்கும் நிகழ்வுகளை பற்றியும்தான் சொல்கிறது. இரண்டு தீர்க்க தரிசிகள் இருக்காங்க, இதுல 144,000 யூத சுவிசேஷகர்கள் இருக்காங்க, இங்க அந்தி கிறிஸ்து இருக்கிறான், கள்ள தீர்க்க தரிசி இருக்கான், திரளான விசுவாசிகள் பற்றி இருக்கிறது. நியாயத்தீர்ப்புகள் கட்டவிழ்க்கப்படும் நிகழ்வுகள் இருக்கிறது. இதெல்லாம் எதிர்கால நிகழ்வு.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆல்ரைட், சரி, மார்க், ஜனங்கள் பொதுவாக கேட்கும் ஒரு கேள்வி இருக்கிறது அதாவது, நாம, பரலோகத்திற்கு போகும்போது, சொந்த கண்களால் தேவனை பார்க்க முடியுமா?

**டாக்டர் மார்க் ஹிட்ச்காக்:..**சரிஇ பலதரப்பட்ட மக்கள் என்னிடம் இல்லைன்னு சொல்லியிருக்காங்கஇ நீங்க தேவனை பார்க்க முடியாது ஏன்னா இதை விளக்க பொதுவாக மக்கள் வேத வசனத்தை முன்வைத்து சொல்கிறார்கள்இஅ தாவதுஇ நாம தேவனை பார்க்க முடியாதுஇ நம்மால தேவனை பார்க்க முடித்து. யாத்திராகமம் 33:20 கூறுகிறதுஇ “நீ என் முகத்தை காணமாட்டாய்இ ஒரு மனுஷனும் என்னை கண்டு உயிரோடு இருக்க முடியாது.” யோவான் 1: பதினெட்டு சொல்கிறதுஇ “ஒருவரும் ஒருகாலும் தேவனை கண்டது இல்லை. 1 தீமோத்தேயு 6:15-16 தேவனை பற்றி கூறும்போது அங்குஇ “ஒருவராய், சாவாமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும்,

மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்;"

சரி, இது ஒரு கேள்வியை எழுப்புவதாக இருக்கிறது. அதாவது, நீங்க வெளிப்படுத்தல் நான்கு இரண்டை பார்க்கு போது, யோவான் செய்கிற முதல் காரியம் அவன் பரலோகத்திற்குள் எடுத்துகொள்ளப்பட்டதும் அவர் சொல்கிறார், " ஒரு சிங்காசனத்தையும் அதில் வீற்றிருக்கிறவரையும் கண்டேன்." தெளிவாக இது பிதாவாகிய தேவனை பற்றிதான் சொல்லுகிறது, ஏன்னா அடுத்த அதிகாரத்தில் தான் இயேசு வந்து இதில் வீற்றிருக்கிறவரின் கரத்தில் இருந்து சுருளை வாங்குகிறார். அதனால யோவான் தேவனை பார்த்தான் என்று புரிகிறது, பிதாவாகிய தேவன். சரி, தேவன் வர்ணிக்கப்பட்டிருக்கும் விதத்தை பாருங்க சேரக்கூடாத மகா பிரகாசமான ஒளியாக இருக்கிறார். இது என்ன சொல்கிறது என்று நினைக்கிறேன் என்றால் நம்முடைய மகிமையடையாத இந்த பூமிக்குரிய சரீரத்தில் இப்ப யாரும் தேவனை அவருடைய பரிபூரண தன்மையில் பார்த்து ஜீவித்திருக்க முடியாமல் இருக்கும். ஆனா நாம மகிமையடைந்த சரீரத்தோடு பரலோகம் போகும்போது அங்கு சிங்காசனத்தில் வீற்றிருக்கும் தேவனுடைய முழுமையான பிரசனத்தில் அவரை நாம் காண முடியும். சரி, தேவன் சர்வ வியாபியாக இருக்கிறார், இந்த பூமியை நிரப்பி இருக்கிறார். ஆனா அவருடைய பிரசன்னம் நிறைந்த ஸ்தானம் இருக்கு. தேவன் பரலோகத்தில் அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிறார். நான் நம்புகிறேன் நான் பரலோகத்தில் பூரணமான மகிமையடைந்த சரீரத்தோடு இருக்கும்போது நிச்சயம் சிங்காசனத்தில் வீற்றிற்குக்கும் தேவனை நாம் பார்க்க போகிறோம்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** ஆமா. நாம புதிய வானங்கள் புதிய பூமி என்பதை பற்றி பேசும்போது, தேவன் நம்முடைய தேவனாக இருப்பார் என்றும், நாம் அவரை பார்ப்போம், அவரோடு நடப்போம் அவரோடு பேசுவோம் சம்பாஷிப்போம் என்று இருக்கிறது. அப்ப...

இத, எட், கொஞ்சம் தெளிவா துல்லியமா சொல்லுங்க. சில ஜனங்கள் தங்களிடம் சில கேள்விகள் கேட்கப்படும்போது திகைத்து நிற்க கூடாது, “நீ உன் சொந்த கண்களால் தேவனை ஒரு நாள் பார்க்க போகிறாயா? அதுக்கு அவங்க இல்ல எனக்கு தெரியாது எனக்கு தோனல, ஆனா பார்க்க விரும்புகிறேன் என்று சொல்ல கூடாது.” அவங்க எப்படி அங்க இருக்க முடியும்? அவங்களும் அங்கு இருப்பதற்கான வழியை சொல்றீங்களா?

**டாக்டர் எட் ஹிந்த்சன்:**...சரி, வேதாகமத்தின் அழைப்பு ரொம்ப யதாரத்தமானதாக இருக்கிறது. “தேவனுடைய நாமத்தை தொழுதுகொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்.” இயேசு தொடர்ந்து மக்களை அழைத்துகொண்டே இருக்கிறார், “என்னிடத்தில் வாருங்கள், என்கிறார். தேவன் உங்களோடு தனிப்பட்ட உறவில் இரட்சிப்பின் அனுபவத்தில் வந்து உங்கள் வாழ்வை மாற்றி தமது ஆவியில் உங்கள் வாழ்வில் வாசம் பண்ணி, தேவனுடைய ஆவியினால் மரித்து போயிருக்கும் உங்கள் ஆவியை உயிர்பிக்க விரும்புகிறார். அப்போது நீங்கள் பிழைப்பீர்கள். நீங்க நித்திய நித்தியமாக தேவனோடு இருப்பீர்கள். தேவன் இருக்கும் வரைக்கும் நீங்களும் ஜீவித்து இருப்பீர்கள் ஏன்னா தேவன் உங்களுக்குள் வாசமாக இருக்கிறார்.

இதுதான் வேதாகமத்தின் தனிப்பட்ட அழைப்பாக இருக்கிறது, இதுதான் வெளிப்படுத்தின விசேஷத்தின் தனிப்பட்ட அழைப்பாக இருக்கிறது. அந்த புத்தகத்தின் இறுதியை பார்க்கும்போது எல்லாத்துக்கு கடைசியில் தேவன் சொல்கிற வார்த்தையை பார்க்க முடியும், “வா” ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள் என்று இருக்கிறது.

நா தேவனை முகமுகமாக பார்க்க போகிறேனா? வெளிப்படுத்தின விசேஷத்தின் வாக்குத்தத்தம் ஆம் என்பதே, பார்ப்பீர்கள். உண்மையாகவே ராஜாவோடு சில பார்வையாளர்களும் இருப்பார்கள். இந்த கேள்விக்கான பதில், நீங்க அவரை பார்ப்பீர்களா, இதுக்கு திடமான சந்தேகமற்ற பத்தி, “ஆமா, நிச்சயமா.” மேலும், “நன்புகிறேன், என்னால இயன்றதை செய்கிறேன் என்பது அல்ல. உங்கள் பாவங்களுக்காக மரிக்கும்படி இயேசுவை சிலுவைக்கு அனுப்பியபோதே தன்னுடைய சிறந்ததை தேவன் செய்து முடித்துவிட்டார். பாவமற்ற தேவனுடைய குமாரன் உங்கள்

பாவங்களினால் உண்டான தேவ கோபாக்கினையை சிலுவையில் சுமந்தார், மரணத்தில் இருந்து உயிர்த்து நமக்கு நித்திய ஜீவனை ஈவாக தந்திருக்கிறார். அவர் உங்களுக்காக செய்தவற்றை விசுவாசத்தோடு நம்பும்படியாக உங்களை வருந்தி அழைக்கிறார். இயேசு உங்களுக்காக செய்த காரியத்தின் நிமித்தம் நீங்கள் பரலோகம் செல்லவும் தேவனை முகமுகமாக பார்க்கவும் முடியும்.

**Dr. ஜான் அன்கெர்பெர்க்:** பிரமாதம், நேயர்களே, இதுவரைக்கும் நீங்க செய்யாம இருந்திருந்தா அதை நிச்சயம் செய்வீர்கள் என நம்புகிறேன். இப்போதே நேரம் எடுத்து ஜெபித்து தேவன் உங்கள் வாழ்வில் பிரவேசிக்கும்படி அழைத்து உங்க தேவனாக இரட்சகராக ஏற்றுகொள்ளுங்கள், உங்களை பாவங்களை மன்னிக்க கேளுங்கள் உங்களுக்கு அவர் தம்மை வெளிப்படுத்த கேளுங்கள் அதினால் நீங்க அவருக்கு உரியவர்கள் என்பதை அறிந்துகொள்வீர்கள்.

சரி, அடுத்தவாரம் பரலோகத்தில் எழுப்ப கூடிய ஒரு பிரச்சனையை குறித்து நாம் பார்க்க இருக்கிறோம், தேவன் தமது கரத்தில் முத்திரை போடப்பட்ட சுருளை வைத்திருக்கிறார், அந்த முத்திரையை உடைக்கும்படி யாருமே அவருடைய கரத்திலுள்ள சுருளை வாங்கவில்லை. திடீரென்று யோவான் ஒரு காட்சியை பார்க்கிறார், அவரால மட்டும்தான் அந்த காரியத்தை செய்ய முடியும். அதை பற்றிதான் நாம் அடுத்த வாரம் பேசிட இருக்கிறோம் அந்த முத்திரைகளை அவர் உடைக்கும்போது என்ன நடக்க ஆரம்பிக்கிறதென்று பார்க்கலாம். அவர் பூமியின் மீது வரப்போகிற நியாயத்தீர்ப்புகள். தவறாமல் அடுத்த வாரம் பார்ப்பீர்கள் என நம்புகிறேன்.

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண
இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்
செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் ;துயுளாழற.ழசப

;2015 யு.வு.சு.ஐ.